**செய்தி வெளியீடு எண்: 510** **நாள்: 01.08.2018**

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 77–வது கூட்டம் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் தலைவருமான டாக்டர் நிலோபர் கபில் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியக் கருத்தரங்குக் கூடத்தில் நடைபெற்றது.

தொழிலாளர் துறை ஆணையர் அவர்கள் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 77வது கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் செயல்பாடுகள் குறித்தும் அதன் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

இக்கூட்டத்தில் வாரியத்தின் 2014–15ம் ஆண்டறிக்கை, 2015–16ம் ஆண்டறிக்கை (ம) 2016–17ம் ஆண்டறிக்கை மற்றும் 2017–18ம் (ம) 2018–19ம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடுகளை ஏற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய நலத் திட்டப் பயன்களை அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் துய்ப்பதற்கு ஏதுவாக தற்போதுள்ள ஊதிய உச்ச வரம்பினை ரூ.15,000/–லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் கல்வி உதவித் தொகை ரூ.2,000/– முதல் ரூ.6,000/– வழங்கப்பட்டதை ரூ.4,000/– முதல் ரூ.12,000/– ஆக இருமடங்காகவும், திருமண உதவித் தொகையினை ரூ.3,000/–, ரூ.5,000/– என்றிருந்ததை மாற்றி ஆண் பெண் இருபாலருக்கும் ரூ.10,000/– ஆகவும், மூக்குக் கண்ணாடி உதவித் தொகையினை ரூ.500/–லிருந்து ரூ.1000/–ஆக உயர்த்தியும், கல்வி உதவித் தொகை, கல்வி ஊக்கத் தொகை மற்றும் பாடநூல் உதவித்தொகை திட்டங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் அக்டோபர் 31 ஆக இருந்ததை டிசம்பர் 31 ஆகவும், இயற்கை மரணம் மற்றும் விபத்து மரண உதவித் தொகை திட்டங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டிய காலக்கெடுவினை ஆறு மாதத்திலிருந்து 12 மாதங்களாக நீட்டித்து இக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு மங்கத் ராம் ஷர்மா, இ.ஆ.ப. அவர்கள், தொழிலாளர் ஆணையர் முனைவர் இரா. நந்த கோபால், இ.ஆ.ப. அவர்கள், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் திரு கு.காளியண்ணன், நிதித்துறை துணைச் செயலாளர் திரு டி. கலைச்செல்வன், நிர்வாகத் தரப்பு பிரதிநிதிகள் திரு. கே.மாணிக்கம் (EFSI), திரு. கே.எம்.ஜி.கணேஷ் (SIMA), திரு. பா. ராம்குமார் (PAT), திரு எம்.பையாஸ் அகமது (AISHTMA), தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகள் திரு. டி.எம். மூர்த்தி (AITUC), திரு. கே.ஏ. மனோகரன் (INTUC), திரு. வி. குமார் (CITU), திரு. எம். அப்துல் ஹமீது (ATP), திரு தாடி.எம்.ராசு (ATP) மற்றும் நியமன உறுப்பினர்கள் திருமதி பாத்திமா வசந்த் மற்றும் திருமதி கிரிஜா குமாரபாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

வாரியச் செயலாளர் திருமதி உ.உமாதேவி அவர்கள் நன்றி கூற, இக்கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**